


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 355 | 4 Pages | 21.7.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 355 | 4 பக்கங்கள் | 21.7.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்**
**உற்றார்க் குடம்பும் மிகை**

**விளக்கம்:**
பிறவித் துன்பத்தைப் போக்க முயல்கின்றவர்க்கு உடம்பும் மிகையான பொருள் ஆகையால் அதற்கு மேல் வேறு தொடர்பு கொள்வது ஏனோ.

# 762 மாணவர்களுக்கு தலா ரூ.10,000 கல்விக் கட்டணம் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்

சென்னை, ஜூலை 21
தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, கொளத்தூர், ரெட் ஹில்ஸ் சாலை, எஸ். ஜெ. அவென்யூ, அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நாளை (21.07.2025) திங்கட்கிழமை காலை 09.45 மணியளவில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்ள உள்ளார்.




இந்த விழாவில், அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 762 மாணவ, மாணவியர்களுக்கு கல்விக் கட்டணம் ரூ.10,000/ மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகள் மற்றும் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் பல்கலைக்கழக விதிமுறைகளின் அடிப்படையில் உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 11 நபர்களுக்கும், கண்காணிப்பாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட ஒரு நபருக்கும் பணி நியமன ஆணைகளை வழங்குகிறார்.


## திருப்பதி ஏழுமலையான் கோவில் புஷ்கரணி ஒரு மாதம் மூடல்



திருப்பதி, ஜூலை 21
திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:
திருப்பதி ஏழுமலையான் கோவிலில் செப்டம்பர் மாதம் 24ந்தேதி வருடாந்திர பிரம்மோற்சவ விழா தொடங்குகிறது. அதையொட்டி கோவில் அருகில் உள்ள புஷ்கரணியில் பழுதுப் பார்ப்பு மற்றும் சீரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அதற்காக இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் ஆகஸ்டு மாதம் 19ந்தேதி வரை ஒரு மாதம் புஷ்கரணி மூடப்படுகிறது.
எனவே ஒரு மாத காலத்தில் புஷ்கரணியில் ஆரத்தி இருக்காது. பக்தர்கள் புஷ்கரணியில் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். பக்தர்கள் இதைக் கவனத்தில் கொண்டு தேவஸ்தானத்துக்கு ஒத்துழைக்க வேண்டும். எனினும், பழுதுப்பார்ப்பு மற்றும் சீரமைப்பு பணிகளை முன்கூட்டியே முடிக்க தேவஸ்தானம் நீர் வழங்கல் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மறு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் வரை சென்னை மாநகராட்சி வாகன நிறுத்துமிடங்களில் கட்டணம் கிடையாது என அறிவிப்பு

சென்னை, ஜூலை 21
பெருநகர சென்னை மாநகராட்சியின் இணை இயக்குநர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;
"பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வாகன நிறுத்தக் கட்டண வசூலுக்கான ஒப்பம் இன்றுடன்(20.07.2025)முடிவடைவதையொட்டி வாகன வசூலுக்கான மறு ஒப்பந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரை பொதுமக்கள் வாகன நிறுத்துமிடங்களில் எவ்விதக் கட்டணமுமின்றி தங்களது வாகனங்களை நிறுத்திக் கொள்ளலாம்.
பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வாகன நிறுத்தக் கட்டண வசூல் பணியானது தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், தற்போது மேற்கண்ட நிறுவனத்துடனான ஒப்பந்தம் இன்றுடன் (20.07.2025) முடிவடைகிறது.



இதனையொட்டி பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வாகன நிறுத்தத்திற்கான ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநகராட்சியின் சார்பில் மறு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் வரை, பொதுமக்கள் தங்கள் வாகனங்களை, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள வாகன நிறுத்துமிடங்களில் எவ்விதக் கட்டணமுமின்றி நிறுத்திக் கொள்ளலாம்.
இது தொடர்பான புகார்களுக்கு, பெருநகர சென்னை மாநகராட்சியின் 1913 என்ற தொலைபேசி எண்ணில் பொதுமக்கள் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சிறுபான்மையினருக்கும் பிடித்தமான இடமாக இந்தியா உள்ளது: கிரண் ரிஜிஜூ



புதுடெல்லி, ஜூலை 21
மத்திய சிறுபான்மையினர் விவகாரத்துறை மந்திரி கிரண் ரிஜிஜு, ஒரு செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்தார். அவர்கூறியதாவது:
இந்தியாவில் சிறுபான்மையினர் சித்ரவதை செய்யப்படுவதாகவும், கொல்லப்படுவதாகவும், அவர்களுக்குஇங்குபாதுகாப்பு இல்லை என்றும் காங்கிரஸ் ஆதரவுடன் இடதுசாரிகள் ஓயாமல் பிரசாரம் செய்து வருகிறார்கள். இத்தகைய கட்டுக்கதைகள் இந்தியாவுக்கு எந்த வகையிலும் உதவாது. இந்தியாவில் உள்ள மக்கள், சட்டத்துக்கு கட்டுப்பட்டவர்கள். இது மதச்சார்பற்ற நாடு. நமக்கு அரசியல் சாசனம் உள்ளது. சிறுபான்மையோ, பெரும்பான்மையோ ஒவ்வொருவரும் சமம்.
காங்கிரஸ் ஆட்சியின்போது, ஒருசில சம்பவங்களும், கலவரங்களும் நடந்திருக்கலாம். ஆனால் பொதுவாக, சிறுபான்மையினர் இந்தியாவில் பாதுகாப்பாக உள்ளனர்.இந்துக்கள் பெரும்பான்மையாக இருப்பதால்தான், அனைத்து சிறுபான்மையினரும் முழு சுதந்திரமும், பாதுகாப்பும் பெற்றுள்ளனர்.பெரும்பான்மை இந்துக்கள் மதசார்பற்றவர்களாகவும், சகிப்புத்தன்மை கொண்டவர்களாகவும் இருப்பதால், பழங்குடியினர், சிறுபான்மையினர் ஒவ்வொருவரும் பாதுகாப்பாக உள்ளனர். அதனால்தான் ஒவ்வொரு சிறுபான்மையினருக்கும் பிடித்தமான இடமாக இந்தியா இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# அ.தி.மு.க. கூட்டணியில் இணைய இருக்கும் பிரமாண்ட கட்சி த.வெ.க.வா? முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜூ பேட்டி

தூத்துக்குடி, ஜூலை 21
தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்ச ரும், கோவில்பட்டி எம்.எல்.ஏ.வுமான கடம்பூர் ராஜூ செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:
அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடந்த 6ந் தேதி முதல் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு மக்களை சந்தித்து வருகிறார். ஆளும் கட்சியான தி.மு.க. கூட்டணிக் கட்சிகளை நம்பி உள்ளது.
ஆனால் எடப்பாடி பழனிசாமி மக்களை நம்பி உள்ளார். அவர் செல்கின்ற இடங்களில் மக்கள் கூடும் கூட்டமே ஆட்சி மாற்றத்திற் கான சாட்சியாக உள்ளது.அந்த வகையில் தூத்துக் குடி மாவட்டத்தில் வருகிற 31ந்தேதி விளாத்திகுளத்திலும், 1ந் தேதி கோவில் பட்டியிலும் பிரசாரம் மேற்கொள்கிறார்.
ஓரணியில் தமிழ்நாடு என்ற பெயரில் அதிகாரிகளை வைத்து தி.மு.க. உறுப்பினர் சேர்க்கை நடத்தி வருகிறது. செய்தி தொடர்பாளர்கள் என்று 4 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை தமிழக அரசு நியமித்துள்ளது. அரசியலுக்காக அரசு அதிகாரிகளை பயன்படுத்தும் போக்கினை கண்டித்து எடப்பாடி பழனிசாமிஅறிக்கைவெளியிட்டுள்ளார். இதுவரை இதற்கு முதல்அமைச்சர் பதிலளிக்கவில்லை. இது எதை காட்டுகிறது என்றால் தி.மு.க.வின் பயத்தை காட்டுகிறது. தி.மு.க.விற்கு மக்களை சந்திக்க பயம். தி.மு.க. ஆட்சியை மக்கள் நிராகரிப்பார்கள். அ.தி.மு.க.விற்கு மாபெரும் வெற்றியை தருவார்கள். எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. தனித்து ஆட்சி அமைக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.



அப்போது, பிரமாண்ட மான கட்சி அ.தி.மு.க. கூட்டணியில் இணைய இருப்பதாக எடப்பாடி பழனிசாமி கூறி இருப்பது தமிழக வெற்றிக் கழகத் தையா? என்ற செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு, இருக்கலாம், ஒத்த கருத்துடைய கட்சிகள் வரலாம் என்று ஏற்கனவே சொல்லி வருகிறோம் என கடம்பூர் ராஜூ பதில் அளித்தார்.

## 5 ஜெட் விமானங்கள் : உண்மை நிலை என்ன? மோடிக்கு ராகுல் காந்தி கேள்வி



புதுடெல்லி, ஜூலை 21
கடந்த மே 7ந் தேதி இந்தியா பாகிஸ்தான் இடையே சண்டை மூண்டது. 10ந் தேதி, பாகிஸ்தான் கேட்டுக்கொண்டதால், இந்தியா சண்டைநிறுத்தத்துக்குசம்மதித்தது. ஆனால், தானே சண்டையை நிறுத்தியதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் மீண்டும் மீண்டும் கூறி வருகிறார். இந்நிலையில், சண்டையின்போது 5 ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக டிரம்ப் புதிய தகவலை வெளியிட்டுள்ளார்.
குடியரசு கட்சி செனட் உறுப்பினர்களுக்கு வெள்ளை மாளிகையில் டிரம்ப் விருந்து அளித்தார். அப்போது அவர் பேசுகையில், இந்தியாபாகிஸ்தான் இடையே சண்டை நடந்தது உங்களுக்கு தெரியும். அப்போது, வானில் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 4 அல்லது 5 விமானங்கள் சுடப்பட்டன. உண்மையில், 5 ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக கருதுகிறேன்.
நிலைமை மோசமாகிக்கொண்டிருந்தது. இரு நாடுகளும் அணுஆயுத நாடுகள். ஒன்றையொன்று தாக்கிக்கொண்டிருந்தன. வர்த்தகம் மூலமாக அதற்கு தீர்வு கண்டோம். ''நீங்கள் ஆயுதங்களை தூக்கி அலைந்து கொண்டிருந்தால்,உங்களுடன்வர்த்தகஒப்பந்தம்செய்துகொள்ளமாட்டோம்'' என்று கூறினோம்" என்றார்.இந்நிலையில், டிரம்ப் கருத்தை சுட்டிக்காட்டி, மத்திய அரசுக்கு காங்கிரஸ் கட்சி கேள்விகளை எழுப்பி வருகிறது. அந்த வகையில் ராகுல் காந்தி தனது எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது; "மோடி ஜி, 5 ஜெட் விமானங்கள் பின்னணியில் உள்ள உண்மை என்ன? தேசம் அதை அறிந்து கொள்ளும் உரிமை உள்ளது" என்று பதிவிட்டுள்ளார்.

# ராகுல் காந்தியின் பேச்சு முதிர்ச்சியின்மையை காட்டுகிறது: பெ.சண்முகம் விமர்சனம்



சென்னை, ஜூலை 21
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இல்லாமல் மதசார்பின்மையை பாதுகாக்க முடியுமா? என்று பெ.சண்முகம் கேள்வி எழுப்பியுள்ளார்.
கேரள மாநில முன்னாள் முதல் மந்திரியும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான உம்மன் சாண்டி முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி கூட்டம் கோட்டயம் புதுப்பள்ளியில் நடைபெற்றது. இதில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கலந்து கொண்டு பேசினார்.
அப்பொது, ஆர்.எஸ்.எஸுக்கும், மார்க்சிஸ்ட் கட்சிக்கும் மக்களை பற்றிய புரிந்துணர்வு இல்லை. அவர்களுக்கு நிறைய கொள்கைகள் இருக்கலாம்.
அவர்களால் நிறைய பேச முடியும். ஆனால்,அவர்களுக்கு மக்களுக்கள் மீது அன்பு இல்லை என்று கூறினார்.
இது குறித்து மார்க்சிஸ்ட் மாநிலச் செயலர் பெ. சண்முகம் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: ,மதவாத சக்தியான பாஜக ஆர்.எஸ்.எஸ்க்கு எதிராக மதசார்பற்ற கட்சிகளை ஒருங்கிணைக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு காங்கிரஸ் கட்சிக்கு உள்ளது. முன்னாள் காங்கிரஸ் கட்சிதலைவர் ராகுல் காந்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியையும், ஆர்.எஸ்.எஸ்யும் சித்தாந்த ரீதியாக சம அளவில் எதிர்த்து போராடுகிறேன் என்று பேசியிருப்பது. அவரது முதிர்ச்சியற்ற தன்மையை வெளிப்படுத்துகிறது.மார்க்சிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சி இல்லாமல் மதசார்பின்மையை பாதுகாக்க முடியுமா? என்றார்



தமிழக வெற்றிக் கழகம் சென்னை கிழக்கு மாவட்டம் செயலாளர் அம்பத்தூர் திரு G.பாலமுருகன் அவர்களின் தலைமையில், விஜய் முருகா அவர்களின் ஏற்பாட்டில் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி சென்னை கிழக்கு மாவட்டம் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற மாபெரும் இலவச மருத்துவ முகாம், கண் பரிசோதனை மற்றும் பல் பரிசோதனை நடைபெற்றது இதில் 500க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயன் பெற்றனர். இதில் நம் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



# கிட்னி விற்பனை விவகாரம்; தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்கு தடை: மருத்துவ இயக்குநரகம் உத்தரவு

ஈரோடு, ஜூலை 21

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையத்தில் கிட்னி விற்பனை செய்யும் புரோக்கர் அப்பகுதியை சேர்ந்த மக்களை அழைத்துச்சென்று கிட்னியை அறுவை சிகிச்சை மூலம் அகற்றி விற்பனை செய்ததாக புகார் எழுந்தது. அதன்பேரில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மூலம் விசாரணை நடந்து வருகிறது. இதுதொடர்பாக, ஈரோட்டில் உள்ள தனியார் மருத்துவமனையில் கிட்னி விற்பனைதொடர்பாக சட்டமருத்துவஇணை இயக்குநர் மீனாட்சி தலைமையிலான குழுவினர் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.




இதைத்தொடர்ந்து, ஈரோடு தனியார் மருத்துவமனையில் ரத்த சுத்திகரிப்பு சிகிச்சை (டயாலிசிஸ்) மட்டுமே மேற்கொள்ள வேண்டும் எனவும், எந்தவித அறுவை சிகிச்சையும் மேற்கொள்ள கூடாது என்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் ராஜமூர்த்தி உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து ஈரோடு மாவட்ட மருத்துவ பணிகள் இணை இயக்குநர் சாந்தகுமாரி கூறுகையில், "ஈரோட்டில் உள்ள தனியார் மருத்துவமனையில் டயாலிசிஸ் சிகிச்சை தவிர மற்ற எந்தவித சிகிச்சையும் மேற்கொள்ள கூடாது என உத்தரவிட்டுள்ளது.

மேலும், மதுரை, திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கிட்னி விற்பனை தொடர்பாக மருத்துவமனைகளில் ஆய்வு மேற்கொள்ளபட்டு வருகிறது'' என்றார்.

# கங்கைகொண்ட சோழபுரத்தில் வரும் 27ம் தேதி திருவாதிரை விழா ராஜேந்திர சோழன் நினைவு நாணயம் பிரதமர் மோடி வெளியிடுகிறார்: பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

ஜெயங்கொண்டம், ஜூலை 21

அரியலூர் அருகே கங்கைகொண்ட சோழபுரத்தில் வரும் 27ம் தேதி நடைபெறும் ஆடி திருவாதிரை விழாவில் பிரதமர் மோடி பங்கேற்று ராஜேந்திர சோழனின் நினைவு நாணயத்தை வெளியிடுகிறார். தமிழகத்தில் கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது பிரதமர் மோடி தமிழ்நாட்டுக்கு 8 முறை படையெடுத்து வந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். ஆனால், ஒரு இடத்தில்கூட வெற்றி பெறாமல் பாஜ படுதோல்வி அடைந்தது. இதையடுத்து தமிழ்நாட்டுக்கு வருவதை பிரதமர் மோடி தவிர்த்து வந்தார். இந்நிலையில் சட்டப்பேரவை பொது தேர்தலுக்கு இன்னும் 9 மாதங்களே உள்ளன. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வந்து அதிமுகவுடன் கூட்டணியை இறுதி செய்துள்ளார்.

மேலும் மதுரையில் நடந்த பாஜ நிகழ்ச்சியிலும் அமித்ஷா பங்கேற்றார். ஆனால், பிரதமர் மோடி இதுவரை தமிழ்நாட்டுக்கு வரவில்லை. அதேசமயம் திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் மாவட்டங்கள் தோறும் சென்று மக்களை சந்தித்து வருகிறார். அதேபோல் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி. மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்ற பெயரில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். இதையடுத்து பிரதமர் மோடியும் இப்போதே தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்து சில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடிவு செய்துள்ளார். அந்த வகையில் அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயில் வளாகத்தில் வரும் 27ம் தேதி கோயிலை கட்டிய ராஜேந்திர சோழனின் பிறந்த நாள் விழா, ஆடித் திருவாதிரை விழாவாக கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. இந்த விழாவில், பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கிறார்.



இதுகுறித்து பா.ஜ வட்டாரங்கள் கூறுகையில், கேரளாவில் வரும் 26ம் தேதி நடைபெறும் அரசு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்று விட்டு, அங்கிருந்து தமிழகத்திற்கு வருகை தருகிறார். அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் வரும் 27ம் தேதி தொல்லியல் துறை சார்பில் நடைபெறும் ராஜேந்திர சோழனின் பிறந்த நாள் விழாவான ஆடி திருவாதிரை விழாவில் சிறப்பு விருந்தினராக பிரதமர் மோடி பங்கேற்கிறார். இந்த விழா, ராஜேந்திர சோழனின் பிறந்த நாள் விழா, கங்கைகொண்ட சோழபுரம் கோயிலை கட்டத் தொடங்கிய ஆயிரமாவது ஆண்டு விழா மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படையெடுத்துச் சென்ற ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழா ஆகிய முப்பெரும் விழாவாக நடைபெற இருக்கிறது.

விழாவில், ராஜேந்திர சோழன் நினைவு நாணயத்தை பிரதமர் மோடி வெளியிடுகிறார். இசையமைப்பாளர் இளைய ராஜாவின் இசை நிகழ்ச்சியும் நடக்கிறது. மேலும், பல்வேறு தலைவர்களும் பங்கேற்க இருக்கின்றனர். பிரதமர் மோடி வருகையையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன' என்றனர். இந்த விழா அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருவதால், முதல்வர் மு.க.ஸ்டாலினும் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரியலூரில் நடைபெறும் விழாவில் பங்கேற்றுவிட்டு, தஞ்சாவூர், பெரம்பலூர் மாவட்டங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளிலும் பிரதமர் மோடி பங்கேற்க உள்ளதாக கூறப்படுகிறது. மறுநாள் (28ம் தேதி) தூத்துக்குடியில் புதுப்பிக்கப்பட்ட விமான நிலையத்தை பிரதமர் மோடி திறந்து வைக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

# தமிழகத்தில் 100 நீர்நிலைகள் விரைவில் புனரமைப்பு: நீர்வளத்துறை அதிகாரிகள் திட்டம்

சென்னை, ஜூலை 21

தமிழ்நாடு முழுவதும் விரைவில் 100 நீர்த்தேக்கங்கள் புனரமைக்க நீர்வளத்துறை திட்டமிட்டுள்ளது. அதன்படி பிரதான் மந்திரி கிரிஷி சின் சாய் யோஜனா திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் 60 சதவீத நிதி, மாநில அரசின் 40 சதவீதம் நிதியுதவியுடன் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. கடந்த 2023ம் ஆண்டில் நீர்நிலைகளை புனரமைக்க தமிழக அரசு நிதி கோரி இருந்த நிலையில் தற்போது ஒன்றிய அரசு ஒதுக்கியுள்ளதால், நீர்வளத்துறை நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல்களை வழங்கியுள்ளது. அதன்படி ரூ.111 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் சென்னை மண்டலத்தில் 11 நீர்த்தேக்கங்கள், மதுரை மண்டலத்தில் 89 நீர்த்தேக்கங்கள் என 100 நீர்நிலைகள் புனரமைக்கப்பட உள்ளது. மேலும் இந்த பணிகள் வரும் டிசம்பர் மாதத்திற்குள் முழுவதுமாக முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக நீர்வளத்துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.



இதுகுறித்து நீர்வளத்துறை அதிகாரிகள் கூறியதாவது: கடந்த 5 ஆண்டுகளில் மழைக்கால வெள்ளப்பெருக்கின் போது அதிகளவில் பாதிக்கப்பட்ட இடங்கள் அடையாளம் காணப்பட்டு முதற்கட்டமாக ரூ.111 கோடியில் 100 நீர்த்தேக்கங்கள் புனரமைப்பு செய்யப்பட உள்ளது. ஒவ்வொருநீர்த்தேக்கத்திற்கும் சுமார் ரூ.1.5 கோடி ஒதுக்கப்படுகிறது. இது மூலமாக பாசன வாய்க்கால்கள் சீரமைப்பு, கரையோரங்களை பலப்படுத்தல், பறவைகளுக்கான தீவுகள் அமைத்தல் மற்றும் கழிவுநீர் புகுதலை தடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

அதேபோல் இந்த நீர்நிலைகள் புனரமைக்கப்படுவதால் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்குகள் கட்டுப்படுத்தப்பட்டு நீர்நிலை நிலைத்தன்மை மற்றும் சேமிப்பு அதிகரிக்கப்படும். மேலும் நீர்த்தேக்கங்கள் எல்லை வரையறுக்கும் பணிகளை நீர்வளத்துறை மற்றும் வருவாய் துறை இணைந்து பணியாற்றி வருகிறது. 14 நாட்களுக்குள் ஆக்கிரமிப்பு குடியேற்றங்கள் அனைத்துக்கும் நோட்டீஸ் வழங்கப்படும். பின்னர் ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகத்திடம் ஆக்கிரமிப்பற்ற பகுதி என சான்றிதழுக்கு விண்ணப்பிக்கப்பட உள்ளது. சென்னை புறநகர் பகுதியான திருவேற்காடு கோலடி ஏரியில் ஆக்கிரமிப்புகள் இன்று அகற்றப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

★ சென்னை மண்டலம்: தாம்பரம், தாழம்பூர், செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ளிட்ட 11 நீர்த்தேக்கங்கள் புனரமைக்கப்படுகிறது.

★ மதுரை மாவட்டத்தின் நகர் மற்றும் புறநகர் பகுதிகள்

★ சிவகங்கை மாவட்டத்தின் கல்லல், சாக்கோட்டை, தேவக்கோட்டை உள்ளிட்ட 49 இடங்கள்.

★ ராமநாதபுரம் மாவட்டத்தின் ஆர்.எஸ்.மங்கலம், நைனார்கோயில், திருவாடானை, முதுகுளத்தூர் உள்ளிட்ட 38 இடங்கள்.

★ கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் தியாகதுருகம், கள்ளக்குறிச்சி, திருநாவலூர் உள்ளிட்ட 11 இடங்கள்.

★ விருதுநகர் மாவட்டத்தில் ஒரு இடம் உள்ளிட்ட 89 நீர்த்தேக்கங்கள் புனரமைக்கப்படுகிறது.

# பூங்காவுக்கு ஒதுக்கிய இடத்தை சாலை அமைக்க பயன்படுத்த முடியாது: ஐகோர்ட்டில் தமிழ்நாடு அரசு பதில்

சென்னை, ஜூலை 21

பூங்காவுக்கு ஒதுக்கிய இடத்தை சாலை அமைக்க பயன்படுத்த முடியாது என சென்னை உயர்நீதி மன்றத்தில் தமிழ்நாடு அரசு பதில் தெரிவித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், தொழுவூரில் சபரிநகர் மனை பிரிவுக்கு சாலை வசதி அமைத்து தர உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. மக்க



ளுக்காக பூங்காவுக்கு ஒதுக்கிய இடத்தில் சாலை அமைக்க அனுமதிக்க முடியாது என்று பி.டி.ஓ. கூறியதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. வழக்கில் எந்த உத்தரவையும் பிறப்பிக்க தேவையில்லை என நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் உத்தரவிட நிலையில், மாவட்ட ஆட்சியரின் முடிவு குறித்து மனுதாரருக்கு தகவல் தெரிவிக்க உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

# தி.மலை அண்ணாமலையார் கோயிலில் ஆடிப்பூரம் பிரம்மோற்சவ விழா கொடியேற்றத்துடன் துவங்கியது: ஏராளமான பக்தர்கள் தரிசனம்

திருவண்ணாமலை, ஜூலை 21

திருவண்ணாமலை அண்ணாமலையார்கோயிலில் ஆடிப்பூரம் பிரம்மோற்சவம் கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது. ஏராளமான பக்தர்கள் குவிந்ததால் சுமார் 4மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் ஆடிப்பூரம் பிரம்மோற்சவ விழா மிகவும் பிரசித்தி பெற்றது. அதன்படி, இந்த ஆண்டு ஆடிப்பூரம் பிரம்மோற்சவம் இன்று தொடங்கியது. இதையொட்டி அதிகாலை நடை திறக்கப்பட்டு கோபூஜை, அண்ணாமலையார், உண்ணாமுலையம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் செய்யப்பட்டு மகாதீபாராதனை நடைபெற்றது.

இதைதொடர்ந்து விநாயகர், பராசக்தி அம்மன் அலங்கார ரூபத்தில் உண்ணாமுலையம்மன் சன்னதி எதிரில் உள்ள தங்க கொடிமரம் முன்பு எழுந்தருளினர். பின்னர் உற்சவ மூர்த்திகளுக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு மகாதீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதைதொடர்ந்து உண்ணாமுலையம்மன் சன்னதி எதிரே உள்ள தங்க கொடிமரத்தில் பிரம்மோற்சவ கொடி ஏற்றப்பட்டது. அண்ணாமலையார் கோயிலில் தீபத்திருவிழா உள்ளிட்ட முக்கிய விழாக்கள் கொடியேற்றத்துடன் தொடங்குவது வழக்கம். அதில், உண்ணாமுலையம்மன் சன்னதி எதிரில் உள்ள கொடிமரத்தில், கொடியேற்றத்துடன் தொடங்கும் விழா ஆடிப்பூர பிரம்மோற்சவம் மட்டும் என்பது தனிச்சிறப்பாகும்.

ஆடிப்பூர பிரம்மோற்சவத்தையொட்டி வரும் 28ம் தேதி வரை தினமும் காலை மற்றும் இரவு அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில் விநாயகர் மற்றும் பராசக்தி அம்மன் அலங்கார ரூபத்தில் மாடவீதியில் பவனி வந்து அருள்பாலிக்க உள்ளனர். நிறைவாக 28ம் தேதி காலை பஞ்சமூர்த்திகள் அபிஷேகமும், அன்று இரவு 11 மணியளவில் அம்மன் சன்னதி முன்பு தீமிதி விழாவும் நடைபெற உள்ளது.

இன்று விடுமுறை தினம் என்பதால் சுவாமி தரிசனம் செய்ய ஆயிரக்கணக்கான பக்தர்கள் திருவண்ணாமலையில் குவிந்தனர். இவர்கள் பொதுதரிசனத்திற்கு ராஜகோபுரம் வழியாகவும், கட்டண தரிசனத்திற்கு அம்மணியம்மன் கோபுரம் வழியாகவும் அனுமதிக்கப்பட்டனர். தரிசன வரிசை ராஜகோபுரம் மற்றும் அம்மணியம்மன் கோபுரத்தை கடந்து மாடவீதி வரை நீண்டிருந்தது. இவர்கள் சுமார் 4மணிநேரம் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

# 85 சதவீத பணிகள் நிறைவு: வேளச்சேரிபரங்கிமலை பறக்கும் ரெயில் சேவை நவம்பர் மாதம் இயக்கம்

சென்னை, ஜூலை 21

சென்னையில் பறக்கும் ரெயில் திட்டம், 3 கட்டங்களாக திட்டமிட ப்பட்டது. அதன்படி, முதல் கட்டமாக சென்னை கடற்கரை மயிலாப்பூர் இடையே கடந்த 1984ம் ஆண்டு இதற்கான பணிகள் தொடங்கியது. 1995ம் ஆண்டு இதற்கான பணிகள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. 2ம் கட்ட பணிகள் மயிலாப்பூர்வேளச்சேரி இடையே 1998ம் ஆண்டு தொடங்கி, 2004ம் ஆண்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. மேலும், 2ம் கட்ட பணி விரிவாக்கமாக கடந்த 2008ம் ஆண்டு வேளச்சேரிபரங்கிமலை இடையே ரூ.495 கோடி மதிப்பீட்டில் 5 கிலோமீட்டர் தூரத்திற்கு ரெயில் பாதை அமைக்கும் பணி தொடங்கியது. இதில், 4.5 கிலோ மீட்டர் தூரத்துக்கு 167 தூண்களுடன் ரெயில் பாதை அமைக்கப்பட்டது.

இந்த நிலையில், ஆதம்பாக்கம், தில்லை கங்கா நகர் பகுதிகளில் நிலம் கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து சிலர் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். இதனால், ஆதம்பாக்கம் பரங்கிமலை இடையே எஞ்சியிருந்த ½ கிலோ மீட்டர் தூரத்துக்கான பணிகள் முடிக்க முடியாமல் பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டது. இந்த திட்டம் முழுமை அடையாததால் சென்னை கடற்கரையில் இருந்து வேளச்சேரி வரை மட்டுமே தற்போது பறக்கும் ரெயில் சேவை இயக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையே, 15 ஆண்டுகளுக்கு பின்பு கோர்ட்டு மூலம் இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு, கடந்த ஆண்டு பணிகள் மீண்டும் தொடங்கியது. அப்போது, ஆதம்பாக்கம், தில்லை கங்கா நகர் பகுதியில் தூண்கள் மீது அமைக்கப்பட்ட ரெயில் பாலம் திடீரென சரிந்து விழுந்து விபத்துக்குள்ளானது. தற்போது அந்த பாலம் சரி செய்யும் பணி முடிவடைந்துள்ளது. எஞ்சிய ஒரு சில பணிகள் மட்டுமே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், வரும் நவம்பர் மாதம் இந்த பணிகள் முழுமையாக முடிவடையும் எனவும் ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து தெற்கு ரெயில்வே அதிகாரிகள் கூறுகையில், 'வேளச்சேரி பரங்கிமலை இடையிலான பறக்கும் ரெயில் பணிகள் 85 சதவீதம் முடிந்துள்ளது. ரெயில்வே பாதுகாப்பு ஆணையத்தின் அனுமதி பெறப்பட்ட பின்பு, இந்த வழித்தடத்தில் ரெயில் சேவை தொடங்கும். அதன்படி, வரும் நவம்பர் மாதம் இறுதியில் வேளச்சேரிபரங்கிமலை இடையே பறக்கும் ரெயில் சேவை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது' என்றனர்.

# கல்லூரி மாணவரின் இருசக்கர வாகனம் போலீசாரால் உடைக்கப்பட்டதா? தமிழக அரசு விளக்கம்



சென்னை, ஜூலை 21

சென்னை காமராஜர் சாலை போர் நினைவுச்சின்னம் அருகே போலீஸ் ரோந்து வாகன ஓட்டுனர், ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த இரண்டு சக்கர வாகனத்தை லத்தியால் உடைக்கும் காட்சி என்று குறிப்பிட்டு ஒரு வீடியோ சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது.

இதுதொடர்பாக தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது. அதில் கூறப்பட்டு உள்ளதாவது:

இது 6 ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட பழைய வீடியோவாகும். சென்னையில் கடந்த 2019ம் ஆண்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீஸ்காரர் ஒருவர் சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த கல்லூரி மாணவரின் இருசக்கர வாகனத்தை தாக்கி உடைத்தார். இதுகுறித்து அப்போதே பல்வேறு ஊடகங்களில் செய்தி வெளியானது. இதனை அண்மையில் நடந்த நிகழ்வுபோல் திரித்து வதந்தி பரப்பி வருகிறார்கள். தவறான தகவலை பரப்ப வேண்டாம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# மதுரை: ரெயிலில் ஜன்னல் ஓரம் பயணித்த பெண்ணிடம் 6 பவுன் சங்கிலி பறிப்பு

மதுரை, ஜூலை 21

மும்பையில் இருந்து மதுரைவழியாகநாகர்கோவிலுக்கு வாரம் 3 முறை எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்கப்படுகிறது. மும்பையில் இருந்து கடந்த 17ந் தேதி நாகர்கோவில் புறப்பட்ட இந்த ரெயிலில் (வ. எண்.16339) சேலத்தில் இருந்து நெல்லைக்கு பயணிக்க ஒரு பெண் முன்பதிவு செய்திருந்தார். அதன்படி சேலம் ரெயில் நிலையத்தில் இருந்து எஸ் 2 பெட்டியில் பயணம் செய்து வந்தார். ஜன்னல் அருகே உள்ள இருக்கை அவருக்கு ஒதுக்கப்பட்டு இருந்தது.

இந்த ரெயில் நேற்று அதிகாலை 4.10 மணிக்கு மதுரை ரெயில் நிலையம் வந்தது. அந்த பெண் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். அவர் கழுத்தில் அணிந்து இருந்த சுமார் 6 பவுன் தங்க சங்கிலியை திடீரென மர்மநபர் ஜன்னல் வழியாக கையை விட்டு பறித்துக்கொண்டு ஓடினார். அதனை தொடர்ந்து அப்பெண் கூச்சல் போடவே சக பயணிகள் உடனடியாக ரெயில் பெட்டிக்குள் இருந்த அனைத்து விளக்குகளையும் எரியவிட்டனர். பின்னர் அந்த நபரை தேடிப் பார்த்தபோது அவர் பிளாட்பாரத்தில்இல்லை. இது குறித்து ரெயில்வே போலீசாருக்கு புகார் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில், மதுரை ரெயில்வே போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மதுரை ரெயில் நிலையத்தில் பெண் பயணியிடம் நகை பறித்துவிட்டு ஓடிய கொள்ளையனை பிடிக்க 4 தனிப்படைகள் அமைக்கப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: அமைச்சர் கீதா ஜீவன் நேரில் ஆய்வு



தூத்துக்குடி, ஜூலை 21

தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மகளிர் உரிமைத் தொகை தொடர்பான 1,084 மனுக்கள் பெறப்பட்டது.

தூத்துக்குடி 1ம் கேட் அருகில் உள்ள மாநகராட்சி அறிஞர் அண்ணா மண்டபத்தில் 27, 28 மற்றும் 39 வது வார்டு பொது மக்கள் பயன்பெறும் வகையில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான கீதாஜீவன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது மின் இணைப்பு மாற்றம் தொடர்பாக பெறப்பட்ட மனுவின் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணத்தை பயனாளியிடம் வழங்கினார். மேலும் இந்த முகாமில் மகளிர் உரிமைத் தொகை தொடர்பான 1,084 மனுக்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை தொடர்பான 72 மனுக்கள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை தொடர்பான 65 மனுக்கள், மருத்துவம் மக்கள் நல்வாழ்வு தொடர்பான 78 மனுக்கள், எரிசக்திதுறை சம்பந்தப்பட்ட 54 மனுக்கள் உட்பட மொத்தம் 1,512 மனுக்கள் பெறப்பட்டன.

இந்த நிகழ்ச்சியின்போது மாநகராட்சி உதவி ஆணையர் வெங்கட்ராமன், வட்டாட்சியர் முரளிதரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், பகுதிச் செயலாளர் சுரேஷ்குமார், கவுன்சிலர்கள் சரண்யா, ராமு அம்மாள், வட்டச்செயலாளர்கள் சாமிநாதன், கருப்பசாமி, பொன்ராஜ், மாவட்ட பிரதிநிதி ராஜ்குமார், மாவட்ட மருத்துவரணி தலைவர் அருண்குமார், வட்ட பிரதிநிதிகள் சண்முகவேல், அருணாச்சல கண்ணன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# நீலகிரி: சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வாலிபருக்கு 20 ஆண்டு சிறை தண்டனை



நீலகிரி, ஜூலை 21

நீலகிரி மாவட்டம் தேவாலா பகுதியை சேர்ந்த கூலித்தொழிலாளி தம்பதிக்கு 12 வயதில் ஒரு மகன் மற்றும் 10 வயதில் ஒரு மகள் இருந்தனர். தம்பதியின் குழந்தைகள் இருவரும் அந்த பகுதியில் உள்ள பள்ளியில் படித்து வந்தனர். கடந்த 2019ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பள்ளியில் பெற்றோர்ஆசிரியர் சங்க கூட்டம் நடந்துள்ளது. கூட்டம் முடிந்ததும் சிறுமி உடல் சோர்வாக இருப்பதை கவனித்த ஆசிரியை இதுகுறித்து சிறுமியிடம் கேட்டு உள்ளார்.

அப்போது மே மாதம் கோடை விடுமுறைக்காக சிறுமி தனது உறவினர் வீட்டுக்கு சென்றபோது அதே பகுதியை சேர்ந்த சுப்பிரமணி(வயது 30) என்பவர் சிறுமியை அருகில் உள்ள தேயிலை தோட்டத்திற்கு அழைத்துச் சென்று பாலியல் பலாத்காரம் செய்தது தெரியவந்தது. இதனால்அதிர்ச்சியடைந்த ஆசிரியை இதுகுறித்து சிறுமியின் பெற்றோருக்கும், தேவாலா அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்திற்கும் தகவல் தெரிவித்தார். இதுகுறித்து தேவாலா அனைத்து மகளிர் போலீசார் விசாரணை நடத்தி போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து சுப்பிரமணியை கைது செய்தனர். இந்த வழக்குவிசாரணைஊட்டி மகிளா கோர்ட்டில் நடைபெற்று வந்தது.

இந்தநிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது. இதில் குற்றம் நிருபிக்கப்பட்டதால் சுப்பிரமணிக்கு 20 ஆண்டு சிறை தண்டனையும், ரூ.15,500 அபராதமும் விதித்து நீதிபதி எம்.செந்தில்குமார் உத்தரவிட்டார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அரசு தரப்பில் ரூ.4 லட்சம் நிவாரணம் வழங்கவும் அறிவுறுத்தினார். இதைத்தொடர்ந்து சுப்பிரமணி கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். இந்த வழக்கில் அரசு தரப்பில் பி.செந்தில்குமார் ஆஜராகி வாதாடினார்.

# இன்ஸ்டா காதல்: மாணவியை கர்ப்பமாக்கிய வாலிபர்

சேலம், ஜூலை 21

சேலம் மாவட்டம் ஓமலூர் பகுதியை சேர்ந்த 18 வயதுடைய வாலிபர் ஒருவர் கட்டிட வேலைக்கு சென்று வந்தார். இவருக்கும் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த 17 வயதுடைய பிளஸ்2 மாணவிக்கும் இன்ஸ்டாகிராமில் பழக்கம் ஏற்பட்டது. நாளடைவில் இது காதலாக மாறியது.

இந்த நிலையில் அந்த வாலிபர் தனது வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் காதலியை வரவழைத்தார். பின்னர் காதலியிடம் உன்னைதிருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறியுள்ளார். இதையடுத்து இருவரும் நெருக்கமாக இருந்துள்ளனர். இதனால் அந்த மாணவி தற்போது 5 மாத கர்ப்பிணியாக உள்ளார்.

இதையடுத்து கட்டிட தொழிலாளி தன்னை கர்ப்பமாக்கியது குறித்து அந்த மாணவி குழந்தைகள் உதவி மையத்திற்கு தகவல் தெரிவித்தார். அதைத்தொடர்ந்து அவர்கள் ஓமலூர் அனைத்து மகளிர்போலீஸ்நிலையத்தில் புகார்கொடுத்தனர். அதன் பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் யுவராணி விசாரணை நடத்தி பிளஸ்2 மாணவியை கர்ப்பமாக்கிய வாலிபர் மீது போக்சோ வழக்குப்பதிவு செய்தார். மேலும் தலைமறைவான வாலிபரை போலீசார் தேடி வருகின்றனர்.

# மின்கம்பங்களில் விளம்பர பதாகைகள் கட்டினால் சட்ட நடவடிக்கை: கல்லிடைக்குறிச்சி செயற்பொறியாளர் எச்சரிக்கை




திருநெல்வேலி ஜூலை 21

கல்லிடைக்குறிச்சி கோட்ட மின்விநியோக செயற்பொறியாளர் சுடலையாடும் பெருமாள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு சொந்தமான கல்லிடைக்குறிச்சி கோட்டத்தின் சுற்று வட்டார பகுதிகளில் லட்சக்கணக்கான மின் கம்பங்களும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மின்மாற்றிகளும் பயன்பாட்டில் இருந்து வருகின்றன.இவற்றில்மின்வாரிய ஊழியர்கள் மற்றும் டான்பிநெட் துறை சார்ந்த பணியாளர்களுக்கு மட்டுமே ஏற இறங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவர்களைத் தவிர தனியார் நபர்கள் ஏறினால் அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இந்த நிலையில் மின் கம்பங்களில் தனியார் நபர்கள் சிலர் சட்டவிரோதமாக ஏறி அவற்றில் தனியார் நிறுவன விளம்பர பதாகைகள் மற்றும் கேபிள் வயர்கள் கட்டி வரப்படுகிறது என்பதை பொதுமக்கள் தரப்பில் இருந்து அடிக்கடி புகார்கள் வருகிறது. ஆகவே கல்லிடைக்குறிச்சி கோட்டத்திற்குட்பட்ட மின்கம்பங்கள், மின்மாற்றிகள் ஆகியவற்றில் சட்டத்திற்கு புறப்பாக விளம்பர தட்டிகள், அனுமதியற்ற கேபிள் வயர்கள் எதனையும் கட்டக் கூடாது. இது மின்வாரிய பணியாளர்களுக்கு பணியின்போது சிரமத்தை ஏற்படுத்துதோடு, ஊழியர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் விபத்து ஏற்பட வழிவகுக்கும். மேலும், ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள விளம்பர பதாகைகள் மற்றும் கேபிள் வயர்களை மின் ஊழியர்கள் துணையோடு உடனடியாக அகற்ற வேண்டும். தவறும் பட்சத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சென்னை: பகுதிநேர ஆசிரியர்கள் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைப்பு



சென்னை, ஜூலை 21

பணி நிரந்தரம் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பகுதி நேர ஆசிரியர்கள் கடந்த 12 நாட்களாக தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். நேற்று சென்னையில் பேரணியாக சென்று கோரிக்கையை நிறைவேற்ற அரசுக்கு வலியுறுத்தினார்கள்.

இந்த நிலையில் போராட்டத்தைத் தற்காலிகமாக ஒத்திவைப்பதாக பகுதி நேர ஆசிரியர் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'அரசுக்கு நமது கோரிக்கையை வென்றெடுக்க மிகப்பெரிய அழுத்தம் கொடுத்துள்ளோம். கூடிய விரைவில் வெற்றியாக மாறும். கடந்த 12 நாட்களாக போராட்டக்களத்தில் இருந்த ஆசிரியர்களின் நிலையைக் கருத்தில் கொண்டு, போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆன்லைன் மேட்ரிமோனியில் திருமணம் செய்வதாக கூறி பண மோசடி அதிகரிப்பு: திருநெல்வேலி எஸ்.பி. எச்சரிக்கை




திருநெல்வேலி jUlai 21

திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஆன்லைன் மேட்ரிமோனியில் *(Online Matrimony)* பார்த்து உங்களை திருமணம் செய்து கொள்வதாக கூறி தற்போது நூதனமான முறையில் பண மோசடி அனைத்து இடங்களிலும் மிக தீவிரமாக நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு நபர் தனது திருமண வரனிற்காக ஆன்லைன் மேட்ரிமோனி வெப்சைட்டில் *(Matrimony website)* "மணமகள் தேவை" என பதிவு செய்து இருந்ததை பார்த்து அறிமுகம் இல்லாத பெண் மர்ம நபர் ஒருவர் வாட்ஸ்அப் வாயிலாக தொடர்பு கொண்டு, தான் உங்களது *profile*ஐ மேட்ரிமோனி வெப்சைட்டில் பார்த்ததாகவும், உங்களை திருமணம் செய்து கொள்வதாக விருப்பம் தெரிவித்துள்ளார். அந்த பெண் நபர், தான் தற்போது வெளிநாட்டில் வசிப்பதாக கூறியும் தங்களை விரைவில் நேரில் பார்க்க உள்ளதாக கூறியதை உண்மையென நம்பி பல நாட்களாக மொபைல் போனிலே பேசி பழகி வந்துள்ளார்.

பின்னர் அந்த பெண் நபர் தன்னிடம் டிரேடிங் *(Trading)* மூலமாக பணத்தை முதலீடு செய்தால் அதிக லாபம் பெற்று தருகிறேன் என்றும் அதை நம் எதிர்கால வாழக்கைக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் ஆசை வார்த்தைகளைக் கூறி அதிக அளவில் பணம் பெற்றுக்கொண்டு ஏமாற்றி உள்ளார். எனவே இதுபோல் ஏமாறாமல் இருக்க ஆன்லைன் மேட்ரிமோனி வெப்சைட்டில் *(online Matrimony website)* வரன் பார்த்து பேசி பழகும் நபர்களை நேரில் சென்று பார்த்து உறுதி செய்திட வேண்டும். மேலும் டிரேடிங் *(Trading)* என்ற பெயரில் பணத்தை கொடுத்து ஏமாற வேண்டாம் என்றும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

இது போன்ற சைபர் கிரைம் நடைபெற்றால் சைபர் கிரைம் இணையதளத்தில் *www.cybercrime.gov.in* மற்றும் 1930 என்ற *Toll Free* எண்ணிற்கு அழைத்து உடனடியாக உங்களுடைய புகாரினை பதிவு செய்யலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடியில் கருக்கலைப்பு செய்த பெண் திடீர் மரணம்: போலீஸ் விசாரணை

தூத்துக்குடி ஜூலை 21

தூத்துக்குடி மாவட்டம், ஏரலை சேர்ந்தவர் தாமஸ் ஸ்டீபன்.

இவர் சாத்தான்குளம் அருகே உள்ள சிதம்பரபுரத்தில் ஆரோக்கிய செல்வபிரபா என்பவரை கடந்த 2022ம் ஆண்டு திருமணம் முடித்தார். அதில் அவர்களுக்கு இரண்டு வயதில் பெண் குழந்தை உள்ளது. இந்த நிலையில் ஆரோக்கிய செல்வபிரபா மீண்டும் கர்ப்பமானதாக தெரிகிறது.

இந்தநிலையில்ஆரோக்கிய செல்வபிரபா, நெல்லை மாவட்டம், திசையன்விளையில் உள்ள தனியார் மருத்துவமனையில் 18ம்தேதி கருக்கலைப்பு சிகிச்சை மேற்கொண்டுள்ளார்.

அதன் பின்னர் ஆரோக்கிய செல்வபிரபாவுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதாக தெரிகிறது. இந்த நிலையில் நேற்று வீட்டில் இருந்தபோது அவருக்கு திடீரென மேலும் உடல்நல குறைவு ஏற்பட்டதாக தெரிகிறது.

இதனால் அவரை சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர், அவர் ஏற்கெனவே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளனர். இதுகுறித்து தகவல் அறிந்த சாத்தான்குளம் டி.எஸ்.பி. சுபக்குமார், இன்ஸ்பெக்டர் ஸ்டீபன் மற்றும் போலீசார் மருத்துவமனையில் சென்று விசாரணை நடத்தினர். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தூத்துக்குடியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் 16,741 மனுக்கள்: கலெக்டர் தகவல்



தூத்துக்குடி ஜூலை 21

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

"தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/திட்டங்களை வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்கக்கூடியது தான் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் நோக்கமாகும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத்துறைகளைச்சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும்.

அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின்உடல்நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க மருத்துவ முகாம்களும் நடத்தப்படும் என தமிழ்நாடு முதல்அமைச்சர் அறிவித்ததைத் தொடர்ந்து, இந்த சிறப்பு திட்ட முகாமினை தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் 15.7.2025 அன்று கடலூர் மாவட்டம் சிதம்பரத்திலிருந்து துவக்கி வைத்தார்.

அதன்படி, தூத்துக்குடி மாவட்டத்தில், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள்மற்றும்ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகள் என அனைத்துப் பகுதிகளிலும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் 15.7.2025 முதல் 18.7.2025 வரை நடைபெற்ற இச்சிறப்பு திட்ட முகாமில் மொத்தம் 16,741 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

பிற துறைச்சார்ந்த 7,173 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவது தொடர்பாக 9,568 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. 4,410 மனுக்கள் 45 நாட்களுக்குள் தீர்வு காணக்கூடிய மனுக்களாக பெறப்பட்டுள்ளது. 2,783 மனுக்கள் 45 நாட்களுக்கு அதிகமாக தீர்வு காணக்கூடிய மனுக்களாக பெறப்பட்டுள்ளது. பெறப்படும் மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் தீர்வு காண அரசு அலுவலர்களுக்கு அறிவு

# தூத்துக்குடியில் வனத்துறை சார்பில் பிளாஸ்டிக் கழிவுகளை சுத்தம் செய்யும் பணி



தூத்துக்குடி ஜூலை 21

தூத்துக்குடி மாவட்ட வனத்துறை சார்பில் வல்லநாடு கலைமான் சரணாலயம், குதிரைமொழி காப்புக் காடு (தேரிகாடு), சாலிகுளம் காப்புக் காடு ஆகியபகுதிகளில்பிளாஸ்டிக் கழிவுகளை சுத்தம் செய்யும் இயக்கம் நடைபெற்றது. இப்பணியில் 250 கிலோ பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டது.

இதில், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பேரூராட்சி மற்றும் கிராம பஞ்சாயத்தின் சுகாதாரப் பணியாளர்கள், அரசுப் பள்ளி மாணவர்கள் மற்றும் வனக் களப் பணியாளர்கள் என சுமார் 200 பேர் கலந்து கொண்டனர். சேகரிக்கப்பட்ட குப்பைகள் அருகிலுள்ள பஞ்சாயத்து பிளாஸ்டிக் கழிவு பதப்படுத்தும் பிரிவுகளில் ஒப்படைக்கப்பட்டன.

# பெரும்பாலான மாணவர்களுக்கு விருப்பமான பாடம் அறிவியல் தான்: தூத்துக்குடி கலெக்டர் தகவல்

தூத்துக்குடி ஜூலை 21

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட அழகர் பப்ளிக் பள்ளியில் நேற்று மாணவர்களின் அறிவியல் படைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் நடத்தப்பட்ட வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி என்றநிகழ்ச்சியில்மாவட்ட கலெக்டர் இளம்பகவத் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, மாணவர்களின் அறிவியல் படைப்புகளை பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் இளம்பகவத் கூறியதாவது:

"வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி" என்ற நிகழ்வில் பங்கேற்கவந்திருக்கும்மாணவ மாணவியர்கள், ஆசிரியர் பெருமக்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். மாணவர்களின் அறிவியல் திறனை மேம்படுத்தும் விதமாக, அறிவியல் மனப்பான்மையை மேம்படுத்தும் விதமாக வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி என்ற நிகழ்வு 2012ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. அறிவியல் சிந்தனைகளை தூண்டக்கூடியதாக இந்த நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது.

அரசியலமைப்பை வகுத்த அறிஞர்கள் 1972ம் ஆண்டு 42வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் முக்கியமான பிரிவினை சேர்த்தார்கள். மாணவர்களிடமும், இளைஞர்களிடமும், மக்களிடமும் அறிவியல் மனப்பான்மையை வளர்க்க வேண்டும். அதற்கான முன் முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்ற பிரிவினை அரசியலமைப்பில் சேர்த்தார்கள். அறிவியல் மனப்பான்மை என்றால் நமது வாழ்க்கையின்சிக்கல்களுக்கும், நமது நாடு எதிர்கொள்கின்ற சிக்கல்களுக்குமான தீர்வை நாம் மூடநம்பிக்கைகளிடமோ அல்லது அறிவியலுக்கு புறம்பான நம்பிக்கைகளிடமோ தேடக்கூடாது. அறிவியல் சார்ந்த தீர்வுகளுக்கு தான் மக்கள் சிந்திக்க வேண்டும் என்ற நோக்கத்தில், அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பது என்பது அரசின் முக்கிய கொள்கையாக வகுக்க வேண்டும் என அரசியலமைப்பு பிரிவில் சேர்க்கப்பட்டது.

இந்தியாவிலேயே மிகச் சிறந்த அறிவியல், பொறியியல், தொழில்நுட்ப கல்லூரிகள் இருக்கக்கூடிய ஒரு மாநிலமாக நமது தமிழ்நாடு உள்ளது. அதற்கான காரணமாக தொடர்ச்சியாக பல்வேறு அறிவியல் சார்ந்த படிப்புகளையும், அறிவியலின் முக்கியத்துவத்தையும் நமது கல்வியாளர்களும், தலைவர்களும் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார்கள். மூடநம்பிக்கைகளில் நாம் மூழ்கிவிடக்கூடாது என கல்வியாளர்களும், தலைவர்களும், ஆசிரியர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். மூடநம்பிக்கைகள் பற்றிய விழிப்புணர்வுக்காக தலைவர்கள் பாடுபட்டு இருக்கிறார்கள்.

கல்வியாளர்களிடமும் மூடநம்பிக்கைகளை ஒழித்துவிட்டு அறிவியல் மனப்பான்மையை மாணாக்கர்களிடம் வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் வகுப்பறையில் கற்று கொடுத்து வருகிறார்கள். கல்லூரிகளிலும் மூடநம்பிக்கைகளை போக்குவதற்காக பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து, அறிவியல் சார்ந்த தீர்வுகளை வலியுறுத்தி வருகிறார்கள். பல ஆண்டுகளாக மேற்கொண்ட தொடர் விழிப்புணர்வு காரணமாக, மற்ற மாநிலங்களை காட்டிலும், தமிழ்நாட்டில் தான் பொறியியல், அறிவியல், கணினி அறிவியல், தொழில்நுட்பம்சார்ந்தவை உள்ளிட்ட அறிவியல் சார்ந்த படிப்புகளை படிக்கின்ற மாணவர்கள் அதிகமாக உள்ளனர்.

உலகத்திலேயே மிக அதிகமான தொழில்நுட்ப வல்லுநர்களை கொண்ட ஒரு மாநிலமாக தமிழ்நாடு வளர்ந்திருக்கிறது. இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமான நிறுவனங்களில் முக்கிய பதவிகளில், மிக உயர்ந்த தொழில்நுட்பம் சார்ந்த பதவிகளில் தமிழ்நாட்டை சார்ந்த பொறியாளர்கள், அறிவியல் வல்லுநர்கள் பதவி வகிக்கின்றனர். கணினி தொழில்நுட்பம் சார்ந்தபல்வேறுபிரிவுகளில் தமிழ்நாட்டை சார்ந்தவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

அரசு மற்றும் தனியார் சார்ந்த நிறுவனங்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளாலும், நமது பெற்றோர்கள் அறிவியலை ஏற்றுக் கொண்ட விதம், இதன் காரணமாக தான் அறிவியல் சார்ந்த படிப்புகளில் மாணவர்கள் கற்றுக் கொண்டதினால் சிறந்த உயர்பதவிகளுக்கு சென்று இருக்கிறார்கள். இதன் விளைவாக உலக அளவில், தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல் துறை, பொறியியல் துறை, உயிர் தொழில்நுட்பவியல் துறை மிக அதிகமான மாணவர்கள் சேர்ந்து கற்றுக் கொண்டு உயர்கல்வி பெற்று, அந்த நாடுகளில் உள்ள உயர்ந்த கல்வி நிறுவனங்களிலும், ஆராய்ச்சி நிறுவனங்களிலும் உயர்ந்த பதவிகளில் வகிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு சமூகத்தை அறிவியலை நோக்கி நகர்த்துவதற்கு கல்வியாளர்கள், தலைவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என பல்வேறு தரப்பினரும் சேர்ந்து முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். அறிவியல் சார்ந்து படிக்காத ஒரு சமூகத்தில் ஏற்படும் விளைவுகளாக நாம் கருதுவது பிற்போக்கான கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ளுதல் ஆகும்.

மாணவர்களுக்கு அறிவியலை ஊக்குவிக்கும் விதத்தில் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக மாணவர்கள் தங்களது அறிவியல் படைப்பாக்கத்தை செய்து கண்காட்சியில் பங்கேற்றுள்ளனர். காந்தத்தின் மூலம் மின்சாரத்தை மைக்கேல் பாரடே கண்டு பிடித்ததினால், மின்சாரம் என்ற மாபெரும் பயன்பாடு வந்தது. நீங்கள் எல்லாரும் எதிர்காலத்தில் மாபெரும் விஞ்ஞானிகளாக வர எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து மாவட்ட கலெக்டர் இளம்பகவத், மாணவ மாணவியர்களின் அறிவியல் படைப்பு கண்காட்சியினை பார்வையிட்டு, அவர்களுடன் கலந்துரையாடினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கணேசமூர்த்தி, அழகர் பப்ளிக் பள்ளியின் தலைவர் ஏ.ஜெயராமன், பல்வேறு பள்ளியின் தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

21.7.2025

# கமாண்டோ பயிற்சி காவலர்களுக்கு தூத்துக்குடி எஸ்.பி. அறிவுரை



தூத்துக்குடி ஜூலை 21

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் இன்று தூத்துக்குடி, வல்லநாடு துப்பாக்கி சுடுதளத்திற்கு நேரில் சென்று அங்கு நடைபெற்று வரும் கமாண்டோ பயிற்சியை பார்வையிட்டார். அப்போது அவர், கமாண்டோ பயிற்சியில் ஈடுபட்டு வரும் காவலர்களிடம், அசாதாரண சூழ்நிலைகளிலும் சட்டம் ஒழுங்கு பிரச்சினையின் போதும் கமாண்டோ பிரிவு முக்கியத்துவம் வகிக்கும் என்றும், கமாண்டோ பயிற்சியை சிறப்பாக கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கினார்.

# நீலகிரி: குன்னூர் அருகே குடியிருப்புக்குள் புகுந்த கரடி



நீலகிரி, ஜூலை 21

நீலகிரி மாவட்டம் குன்னூரில் கடந்த சில நாட்களாக வனவிலங்குகள் குடியிருப்பு பகுதிகளுக்கு வருவது அதிகரித்து உள்ளது. குறிப்பாக கரடிகள் உணவு தேடி வந்து செல்கின்றன. இதனிடையே குன்னூர் அருகே உள்ள பெட்டட்டி பகுதியில் கரடி ஒன்று புகுந்தது. அங்கு உணவு ஏதேனும் இருக்கிறதா என தேடியது.

5 நிமிடம் அப்பகுதியில் கரடி சுற்றி வந்தது. இந்த காட்சி கண்காணிப்பு கேமராவில் பதிவாகி இருந்தது. சமீப காலமாக கரடிகள் நடமாட்டம் அதிகரித்து இருக்கிறது. எனவே, கரடியை கூண்டு வைத்து வனத்துறையினர் பிடிக்க வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் (21.7.2025)

மேஷம்: இன்றைய நாள் அனுகூலமான மாற்றங்களை தரக்கூடியது. புதிய முயற்சிகளில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

ரிஷபம்: இன்றைய நாள் நிதானமாக செயல்பட வேண்டிய நாள். தொழிலில் சிறு சிக்கல்கள் இருக்கலாம். உடல்நலத்திற்குப் பராமரிப்பு தேவை.

மிதுனம்: நல்ல சந்தர்ப்பங்கள் தேடி வரும். நண்பர்களிடமிருந்து ஆதரவு கிடைக்கும். பயணங்களால் நன்மை ஏற்படும்.

கடகம்: உணர்ச்சி மேலாண்மை தேவைப்படும் நாள். குடும்பத்தில் சில பதட்டங்கள் இருக்கலாம். சொந்த விவகாரங்களில் சிந்தித்து பேசவும்.

சிம்மம்: முக்கிய முடிவுகள் எடுக்கும் நாள். பணியாளர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு. வருமானம் கூடும்.

கன்னி: தொழிலில் சிறந்த முன்னேற்றம். போட்டிகளில் வெற்றி வாய்ப்பு. மாணவர்களுக்கு அருமையான நாள்.

துலாம்: நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கும். எதிரிகள் நட்டுக்கொள்கிறார்கள். உறவுகளில் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும்.

விருச்சிகம்: பண வரவுகள் கூடும். வீடு, வாகனங்கள் பற்றிய திட்டங்களில் வெற்றி. நண்பர்கள் மூலம் நன்மை ஏற்படும்.

தனுசு: தவறான முடிவுகள் தவிர்க்கவும். செலவுகள் அதிகரிக்கும். குடும்ப விவகாரங்களில் பொறுமை தேவை.

மகரம்: முன்னேற்றத்துக்கு வாய்ப்பு. வெளிநாடு தொடர்பான முயற்சிகள் வெற்றிகரமாகும். பணத்தில் வளர்ச்சி.

கும்பம்: இன்று உங்களை நம்பி ஒருவர் நெருக்கமானஉதவியைநாடுவார்கள். உங்கள் ஆலோசனைகள் மதிக்கப்படும்.

மீனம்: புதிய முயற்சிகள் வெற்றியளிக்கும். நினைத்த காரியத்தில் சாதனை. மாணவர்கள் இடைஞ்சலின்றி பணிகளை முடிக்க முடியும்.

# நெல்லை சந்திப்பு: ஈரடுக்கு மேம்பாலத்தில் வேன் கவிழ்ந்தது; 10 பேர் காயம்



நெல்லை, ஜூலை 21

தென்காசி மாவட்டம் திருவேங்கடம் அடுத்துள்ள ஆலமநாயக்கன் பட்டி கிராமத்தை சேர்ந்த 30க்கும் மேற்பட்டோர் 2 வேன்களில் திருச்செந்தூர் கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய நேற்று இரவு புறப்பட்டுள்ளனர். இதையடுத்து 2 வேன்களும் இன்று அதிகாலை 1 மணி அளவில் நெல்லை சந்திப்பு ஈரடுக்கு மேம்பாலத்தை கடந்தது. அப்போது அதில் ஒரு வேன் திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையின்குறுக்கே உள்ள சென்டர் மீடியனில் இடித்து கவிழ்ந்தது.

இதனால் வேனில் இருந்த பயணிகள் அலறல் சத்தம் போட்டனர். இந்த விபத்தில் வேனின் முன் பக்க கண்ணாடி அப்பளம்போல் நொறுங்கியது. இதனை பார்த்து அந்த வழியாக சென்றவர்கள் சந்திப்பு போலீசாருக்கும், பாளை தீயணைப்பு வீரர்களுக்கும் தகவல் தெரிவித்தனர். உடனடியாக அவர்கள் அங்கு விரைந்து வந்தனர். வேனின் இடிபாட்டுக்குள் சிக்கியிருந்தவர்கள் முன் பக்க கண்ணாடி உடைந்ததால் அந்த வழியாக வேனில் இருந்து டிரைவர், பயணிகள் வெளியே மீட்கப்பட்டனர். இதில் வேன் டிரைவர் சங்கர் லேசான காயம் அடைந்தார்.

இதில் வேனில் பயணித்த 2 பெண்கள், 1 சிறுவன் உள்ளிட்ட 10 பேர் காயமடைந்த நிலையில் உடனடியாக அவர்கள் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். தொடர்ந்து போலீசார் முன்னிலையில் தீயணைப்பு வீரர்கள் மீட்பு பணியை துரிதப்படுத்தினர். கிரேன் மூலம் வேன் அப்புறப்படுத்தப்பட்டு போக்குவரத்து தொடங்கியது. இந்த விபத்தினால் சுமார் 1 மணி நேரமாக வண்ணார்பேட்டை, ஸ்ரீபுரம் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. அந்த நேரத்தில் சாரல் மழையும் பெய்து கொண்டிருந்தது. இதனால் அப்பகுதி பரபரப்புடன் காணப்பட்டது. இதுதொடர்பாக நெல்லை மாநகர போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 3 நாட்களுக்கு கொட்டப்போகுது மழை தமிழ்நாட்டிற்கு ஆரஞ்ச் அலர்ட்

சென்னை, ஜூலை 21

தமிழ்நாட்டில் அடுத்த மூன்று நாட்களுக்கு மழை வெளுத்து வாங்கும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது. கனமழை எச்சரிக்கை காரணமாக இன்றைய தினம் இரு மாவட்டங்களுக்கு ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. மேலும், 6 மாவட்டங்களுக்கு மஞ்சள் அலர்ட் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்துள்ளது. புதுவையில் லேசான மழை பதிவாகியுள்ளது. காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவியது. தமிழ்நாட்டில் அதிகபட்சமாக நடுவட்டம் (நீலகிரி) பகுதியில் 100 செமீ மழை பெய்துள்ளது. சின்னக்கல்லார் (கோயம்புத்தூர்) 80 செமீ, காட்பாடி (வேலூர்), அவலாஞ்சி (நீலகிரி) தலா 50 செமீ மழை பெய்துள்ளது. இதற்கிடையே தமிழ்நாட்டில் அடுத்த மூன்று நாட்களுக்குக் கனமழை பெய்யும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது. வானிலை மையம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "தென்னிந்தியப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால் இன்று தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மழை அலர்ட் ஜூலை 21ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். நீலகிரி, தென்காசி, தேனி மாவட்டங்கள் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. ஜூலை 22ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. தொடரும் மழை ஜூலை 23,24ம் தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

ஜூலை 25 மற்றும் 27 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.


# முதல் டி20: ஆஸ்திரேலியாவெஸ்ட்இண்டீஸ் அணிகள் இன்று மோதல்



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி, வெஸ்ட்இண்டீசில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. முதலில் நடந்த 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் வெஸ்ட்இண்டீசை எளிதில் வீழ்த்தி ஆஸ்திரேலியா தொடரை 30 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது. இதைத்தொடர்ந்து இவ்விரு அணிகள் இடையே 5 போட்டிகள் கொண்ட டி20 தொடர் நடைபெறுகிறது.

இதில் ஆஸ்திரேலியா வெஸ்ட்இண்டீஸ் அணிகள் இடையிலான முதலாவது டி20 போட்டி கிங்ஸ்டனில் உள்ள சபீனா பார்க் மைதானத்தில் இந்திய நேரப்படி நாளை (திங்கட்கிழமை) அதிகாலை நடக்கிறது. கடந்த ஆண்டு நவம்பர் மாதத்திற்கு பிறகு ஆஸ்திரேலிய அணி ஆடும் முதல் டி20 போட்டி இதுவாகும். இந்திய நேரப்படி நாளைஅதிகாலை 5.30மணிக்கு தொடங்கும் இந்த ஆட்டத்தை பேன்கோடு செயலியில் பார்க்கலாம்.

# ஒவ்வொரு தவறும் பாடம் கற்பிக்கிறது தமன்னா



தமன்னா 16 வயதிலேயே சினிமாவுக்கு வந்து பிரபல நடிகையாக உயர்ந்தார். தமிழில் விஜய், அஜித்குமார், சூர்யா, விக்ரம், தனுஷ் என முன்னணி நடிகர்களோடு நடித்துள்ளார். ஜெயிலர் படத்தில் காவாலா பாடலில் நடனமாடி அனைவரது கவனத்தை ஈர்த்தார். தமிழ் சினிமாவில் சமீபமாக எந்தப் படத்திலும் நடிக்கவில்லை என்றாலும் இன்னும் ரசிகர்களின் மனம் கவர்ந்த நாயகிகளில் ஒருவராகவே இருக்கிறார் தமன்னா தமிழில் கடைசியாக அவர் நடித்து கடந்த வருடம் வெளிவந்த 'அரண்மனை 4' படம் 100 கோடி வசூலைக் கடந்த வெற்றிப் படமாகவே நடித்து வருகிறார். தற்போது தெலுங்கில் ஒரு படம், இந்தியில் ஒரு படம், வெப்சீரஸ் என நடித்து வருகிறார்.

இன்ஸ்டாதளத்தில் சில புகைப்படங்களையும், வீடியோக்களையும் பதிவிட்டு தத்துவமாகப் பதிவிட்டுள்ளார். அதில் "இது கண்டுபிடிக்கும் கட்டம். நீங்கள் பாதி வடிவமைப்பாளராகவும், பாதி துப்பறியும் நபராகவும் இருக்கும் கட்டம். ஒவ்வொரு விவரமும் முக்கியமானது, ஒவ்வொரு தவறும் பாடம் கற்பிக்கிறது. யோசனைகள் ஒட்டும் காகிதங்களில் வாழ்கின்றன. இது இன்னும் சரியாகவில்லை. ஆனால் அது அதன் வழியில் உள்ளது. நேர்மையாகச் சொன்னால், இதுதான் மந்திரம். ஒவ்வொரு பளபளப்பான பொருளுக்குப் பின்னால் ஒருபளபளப்பற்ற செயல்முறை உள்ளது. முடிவுகளும், சந்தேகங்களும், இதுதான். அந்தப் பகுதி அறிவார்ந்த குழப்பமான, உற்சாகமான நடுப்பகுதி" என்று குறிப்பிட்டுள்ளார்.

அனுபவங்கள்தான் நமக்கு பாடத்தைக் கற்றுக் கொடுகின்றன. அந்த விதத்தில் தமன்னாவிற்கு ஏதோ ஒரு அனுபவம் அல்லது அனுபவங்கள் இப்படியான ஒரு பதிவைப் போட வைத்துள்ளது. பாலிவுட் நடிகர் விஜய் வர்மாவை காதலித்து வந்த தமன்னா சில மாதங்களுக்கு முன்பு அவரை பிரேக் அப் செய்துவிட்டார். அதன் விளைவுதான் இப்படியொரு பதிவை அவர் போட்டுள்ளதாக ரசிகர்கள் தெரிவித்துள்ளனர்.

# பெண்கள் ஐரோப்பிய கால்பந்து: சுவிட்சர்லாந்து அணியை வீழ்த்தி ஸ்பெயின் அரையிறுதிக்கு முன்னேற்றம்



14வது பெண்கள் ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி சுவிட்சர்லாந்தில் நடந்து வருகிறது. 16 அணிகள் பங்கேற்ற இந்த போட்டி இறுதி கட்டத்தை எட்டிவிட்டது. இதில் பெர்ன் நகரில் நேற்று முன்தினம் இரவு நடந்த கால்இறுதி ஆட்டம் ஒன்றில் உலக சாம்பியன் ஸ்பெயின் அணி, போட்டியை நடத்தும் சுவிட்சர்லாந்துடன் மோதியது.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் 9வது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை ஸ்பெயின் வீராங்கனை மரரியானா வீணடித்தார். முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

66வது நிமிடத்தில் ஸ்பெயின் அணி முதல் கோல் அடித்தது. மாற்று வீராங்கனையாககளம்கண்டஅதினியாடெல்காஸ்டிலோகோலடித்தார். 71வது நிமிடத்தில் இன்னொரு ஸ்பெயின் வீராங்கனை கிளாடியா பினா கோலடித்து அணியின் முன்னிலையை 20 என்ற கணக்கில் அதிகரித்தார்.

கடைசி வரை போராடியும் சுவிட்சர்லாந்து அணியால் கோல் எதுவும் திருப்ப முடியவில்லை. முடிவில் ஸ்பெயின் அணி 20 என்ற கோல் கணக்கில் சுவிட்சர்லாந்தை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

# விஷ்ணு மஞ்சுவின் "ராமாயணம்"...ராமராக சூர்யா, ராவணனாக யார் தெரியுமா?

விஷ்ணு மஞ்சுவின் கனவுத் திரைப்படமான "கண்ணப்பா" கடந்த மாதம் 27ம் தேதி வெளியானது. தற்போது அதன் திரையரங்கு ஓட்டம் முடிவடைய உள்ளநிலையில், ரசிகர்கள் அதன் ஓடிடி வெளியீட்டிற்காகக் காத்திருக்கிறார்கள்.

இதற்கிடையில், விஷ்ணு ஒரு காலத்தில் தான் செய்ய விரும்பிய மற்றொரு லட்சிய படமான ராமாயணத்தை பற்றிய விவரங்களை பகிர்ந்தார்.

சமீபத்திய ஒரு நேர்காணலில் விஷ்ணு மஞ்சு, கடந்த 2009ம் ஆண்டில், தானும் இயக்குனர் கே. ராகவேந்திர ராவும் ராவணனை மையமாகக் கொண்ட ஒரு படத்தைத் திட்டமிட்டிருந்ததாக தெரிவித்தார். முழு ஸ்கிரிப்ட் முடிக்கப்பட்டபோதிலும், அதிக பட்ஜெட் காரணமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல்போனதாக கூறினார்.

மேலும் இதில் சூர்யாவை ராமராகவும், ஆலியா பட்டை சீதையாகவும் கற்பனை செய்ததாகவும், அது குறித்து சூரியாவிடம் விவாதித்ததாகவும் விஷ்ணு கூறினார். விஷ்ணுவே அனுமனாக நடிக்க விரும்பியதாகவும் ஆனால் ராகவேந்திர ராவ் அவரை இந்திரஜித் வேடத்தில் நடிக்க பரிந்துரைத்ததாகவும் கூறினார்.

விஷ்ணு மஞ்சுவின் ராமாயண திரைப்பட கதாபாத்திரங்கள்:

ராமர் சூர்யா சீதா ஆலியாபட்ரா வணன் மோகன் பாபு இந்திரஜித் கார்த்தி லக்சுமணன் கல்யாண் ராம் ஜடாயு—சத்யராஜ் விஷ்ணு மஞ்சுவின் இந்த நீண்டகால கனவுத் திட்டம் உயிர்பெறுமா என்பதை பொருத்திருந்து பார்போம்.


# பெண்கள் உலகக் கோப்பை செஸ்: இந்திய வீராங்கனைகள் காலிறுதிக்கு தகுதி



பிடே பெண்கள் உலகக் கோப்பை செஸ் போட்டி ஜார்ஜியாவில் உள்ள பதுமி நகரில் நடந்து வருகிறது. இதில் 46 நாடுகளை சேர்ந்த 107 வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இந்த போட்டியில் முதல் 3 இடங்களை பிடிப்பவர்கள் அடுத்த ஆண்டு நடைபெறும் கேண்டிடேட்ஸ் செஸ் போட்டிக்கு (உலக சாம்பியன்ஷிப் தகுதி போட்டி) தகுதி பெறுவார்கள்.

'நாக்அவுட்' முறையில் நடைபெறும் இந்த போட்டி தொடரின் 4வது சுற்றில் இந்தியாவின் முன்னணி வீராங்கனை கோனெரு ஹம்பி 2.51.5 என்ற புள்ளி கணக்கில் முன்னாள் உலக சாம்பியனான அலெக்சாண்ட்ரா கோஸ்ட்னிக்கை (சுவிட்சர்லாந்து) வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். இதேபோல் தமிழக வீராங்கனை ஆர். வைஷாலி 4.53.5 என்ற புள்ளி கணக்கில் மிரெர்ட் கமலிடெனோவாவை (கஜகஸ்தான்) வெளியேற்றி காலிறுதியை எட்டினார். மற்ற ஆட்டங்களில் இந்திய வீராங்கனைகள் டி.ஹரிகா 3.52.5 என்ற புள்ளி கணக்கில் கேத்ரினா லாக்னோவையும் (உக்ரைன்), திவ்யா தேஷ்முக் 2.51.5 என்ற புள்ளி கணக்கில் சீனாவின் சூ ஜினெரையும் தோற்கடித்து காலிறுதிக்குள் நுழைந்தனர். இந்த போட்டியில் ஒரே நாட்டைசேர்ந்த 4 வீராங்கனைகள் காலிறுதிக்கு முன்னேறி இருப்பது இதுவே முதல்முறையாகும்.

# 'சன் ஆப் சர்தார் 2' படத்தின் ரிலீஸ் தேதி மாற்றம்...திரைக்கு வருவது எப்போது?



'சன் ஆப் சர்தார் 2' படத்தின் ரிலீஸ் தேதி ஆகஸ்ட் 1ம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

விஜய் குமார் அரோரா இயக்கியுள்ள இந்த படத்தில் அஜய் தேவ்கன், மிருணாள் தாகூர், ரவி கிஷன், சஞ்சய் மிஸ்ரா, நீரு பஜ்வா, சங்கி பாண்டே, குப்ரா சேத், தீபக் டோப்ரியல், விந்து தாரா சிங், ரோஷ்னி வாலியா, ஷரத் சக்சேனா, சாஹில் மேத்தா மற்றும் மறைந்த நடிகர் முகுல் தேவ் ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்தப் படம், 2012ம் ஆண்டு வெளியான அதிரடிநகைச்சுவை படமான "சன்ஆப்சர்தார்" படத்தின்தொடர்ச்சியாகும். சமீபத்தில் இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி வைரலானது. "சன் ஆப் சர்தார் 2" படம் வருகிற 25 அன்று திரையரங்குகளில் வெளியாக இருந்தநிலையில், தற்போது ஆகஸ்ட் 1ம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளதாகபடக்குழுதெரிவித்திருக்கிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.